# தேசியம்
THESIYAM
www.thesiyamnews.com



சிறந்ததில் மிகச்சிறந்தது
OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS
MATHI COLOURS
NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com
CUSTOMER CARE
+94 77 722 2259



குரல் - 41 | 29.04.2023 (சனிக்கிழமை) | சித்திரை மாதம் | பக்கங்கள் 6 | ஊக்குவிப்பு : ரூ.30.00


# புதிய சட்டம் கருத்து சுதந்திரத்தின் சாவு மணி!
# கிளிநொச்சியில் பாரிய போராட்டம்..!




**புதிய சட்டம் கருத்து சுதந்திரத்தின்கிளிநொச்சி ஊடக அமையத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

## ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்து செயற்பட டக்ளஸ் அழைப்பு



அதிபர் ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்து செயற்பட அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ் - வேலணை பிரதேச செயலக கேட்போர் கூட்டத்தில் நேற்று (28) நடைபெற்ற குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கான இலவச அரிசி வழங்கும் இரண்டாம் கட்ட ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே

## மக்களை மேலும் பாதாளத்திற்குள் தள்ளிவிட்டு பெருமை கொள்ளும் அரசாங்கம்! சாணக்கியன்



சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை மட்டும் வைத்துக் கொண்டு நாட்டினது பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வினை காண முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தினது ஒப்பந்தம் மீதான மூன்றாவது நாள் விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கூறுகையில், அரசாங்கம் பெருமையாக கூறிக்கொள்வதைப் போல் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை மட்டும் வைத்துக் கொண்டு நாட்டினது பொருளாதார

## அரசுக்கு எதிராக ஹர்த்தால் நடத்தியவர்கள் எதற்காக வாக்கெடுப்பில் ஓடி ஒளிந்தார்கள்? - கஜேந்திரகுமார் கேள்வி



தமிழரசுக்கட்சி உள்ளிட்ட தமிழ்தேசிய கூட்டமைப்பிலுள்ள அனைத்துக்கட்சிகளும் தமிழ் மக்களுக்கு அப்பட்டமான பொய் முகங்களை காட்டிவருவதாகவும் எனவே தமிழ் மக்கள் இதனை சரியாக புரிந்து கொள்ளவேண்டுமென தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் இன்று இடம்பெற்ற ஊடகசந்திப்பில் 13வது திருத்தம் தொடர்பாக சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டு தூதுவர்களை சந்தித்து கலந்துரையாடியமை தொடர்பாக எழுப்பபட்ட கேள்விக்கு அவர் இவ்வாறு குற்றம் சுமத்தியிருந்தார்.

தமிழ் மக்களிடமிருந்து வாக்குகளை பெறுவதற்காக 13ஆம் திருத்தம் தமிழ் மக்களின் தீர்வு அல்ல என தெரிவித்துவிட்டு, இந்தியா அமெரிக்கா, அரசாங்கம், மற்றும் சிங்கள முற்போக்குவாதிகளிடம் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் 13வது திருத்ததையே வலியுறுத்துவதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்க 13வது திருத்தத்தே தீர்வு என்று அறிவித்த போது

## யாழில் மே தினத்தன்று இடம்பெறவுள்ள ஊர்வலம்!

வடமாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் மே தினத்தன்று மோட்டார் வாகன ஊர்வலமொன்று நடைபெறவுள்ளது.

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான உள்ளக நீதி தோல்வியடைந்து விட்டது - சபா.குகதாஸ் ஆதங்கம்...!

நாட்டில் யுத்தம் முடிந்து பதின்நான்கு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான உள்ளக நீதி தோல்வியடைந்து விட்டது என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா.குகதாஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தேசியம்
ஆசிரியர் பீடம்

தொலைபேசி : +94 76 567 3339

மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com

இணையம் : www.thesiyamnews.com

# முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கிறது அரசாங்கம்

தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு மாற்றாக பயங்கரவாதத் எதிர்ப்புச் சட்டம் கொண்டுவரப்படுவதாகக் கூறப்பட்டாலும், அது ஜனநாயக விரோத, மனித உரிமை மீறல் செயலாகும்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஒருவர் அளிக்கும் வாக்குமூலத்தை ஒரு பொலிஸ் உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் கூட ஆதாரமாகப் பயன்படுத்தலாம் ஆனால் புதிய சட்டமூலத்தில் அது நீக்கப்பட்டாலும், மிக மோசமான விஷயம் என்னவென்றால், பயங்கரவாதச் செயல்கள் என்று பெயரிடப்பட்ட விஷயங்கள் மிகவும் தீவிரமானவை. மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறும் அரசை மக்கள் விமர்சிக்க முடியாது எனவும், கருத்து தெரிவிப்பது, விமர்சிப்பது, வேலை நிறுத்தம் என அரசியல் சாசனத்தின் அனைத்து விதிகளும் இந்த சட்டமூலத்தில் ரத்து செய்யப்பட்டுள்ளது. தற்போதுள்ள ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்துவதை தடுப்பதற்காக கொண்டு வரப்பட்ட செயலாகவே இது கருதப்படுகி ன்றது.

தற்போது நாட்டில் பல பாகங்களிலும் அரசுக்கு எதிராக போராட்ட அலைகள் உருவாகி கொண்டு வருகின்றன. இந்த புதிய சட்டத்தின் நோக்கம், அதை அடக்குவதற்கு தங்களுக்கு சட்டபூர்வ அங்கீகாரத்தை வழங்குவதேயாகும். விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், தொழில் வல்லுநர்கள் என அரசுக்கு எதிரான போராட்ட அலைகளை ஒடுக்க சட்டத்தின் முன் சட்டப்பூர்வ அங்கீகாரத்தை வழங்குவது இந்த சட்டமூலத்தின் உள்ளடக்கம் என்பது நாம் அனைவரும் அறிந்த விடயமாகும். குறிப்பாக இந்த சட்டமூலத்தை நடைமுறைப்படுத்தினால் சிங்கள பேரினவாத அரசாங்கம் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கலாம் என்று கங்கணம் கட்டுகின்றது. அது மாத்திரமல்ல தமிழர்களின் இருப்பினை அழித்து தமிழர்களின் வாழ்விடங்களில் சிங்களவர்களை சூட்சுமமான முறையில் குடியேற்றும் நோக்கிலேயே அரசாங்கம் இது மாதிரியான ஒரு சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

இந்த புதிய சட்டமூலம் நாட்டின் இறையாண்மை மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் அதே வேளையில் தனிப்பட்ட மற்றும் சமூகப் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளைச் செய்வதை அரசாங்கத்தின் கடமையாகவும் பொறுப்பாகவும் ஏற்றுக்கொள்வதாக திரித்துவ மகாநாயக்க தேரர்கள் தெரிவகத்துள்ளனர். எவ்வாறாயினும், உத்தேச புதிய சட்டமூலத்திற்கு எதிரான சட்டமூலத்தின் சில சரத்துக்கள் ஜனநாயகத்தின் அடிப்படைக் கூறுகளான குடிமகன்கள் சுதந்திரமான கருத்துக்களை வெளியிடும் உரிமையையும் அமைதியான முறையில் போராட்டம் நடத்தும் உரிமையையும் இல்லாதொழிக்கும் வகையில் அமைந்துள்ளது. இந்நிலைமையை கருத்திற்கொண்டு நிபுணர் குழுவின் ஊடாக இந்த சட்டமூலத்தில் உள்ள பொருத்தமற்ற சரத்துக்களை நீக்குவது பொருத்தமானது. ஆனால் அதனை செயற்படுத்த அரசாங்கம் முன்வராது. ஏனெனில் பேரினவாத அரசாங்கம் தமிழர்களை அழிப்பதை பிரதான நோக்கமாக கொண்டு தான் இந்த சட்டமூலத்தை அமுல்படுத்த துடிக்கின்றது.

இதேவேளை, புதிய பயங்கரவாத சட்டமூலத்தின் மூலம் தொழிற்சங்க உரிமைகள், ஊடக உரிமைகள், போராட்டங்கள் என்பன நசுக்கப்படும். ஒரு நாட்டுக்கு நாட்டின் ஜனநாயகம் மற்றும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க சட்டங்கள் தேவை. நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாம் அனைவரும் ஆதரவளிக்க வேண்டும். ஆனால் கொண்டுவரப்படும் அரசாணைகளில் பன்முகத்தன்மையை உறுதி செய்வது அரசின் பொறுப்பு. இந்த புதிய சட்டமூலத்தை நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பில் பிரச்சினை இல்லாத ஒரு கட்டத்தில் இருந்து அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் அனைத்து தரப்பினரின் உரிமைகளையும் பெற்றுக் கொள்ளும் வகையில் இந்த புதிய சட்டமூலத்தை தயாரிப்பது மிகவும் நடைமுறைக்குரியதாக இருக்கும்.

ஆசிரியர் ■ யாழ்ப்பாணம்

# ஹாபீஸ் நசீர் அகமட்டின் உருவபொம்மையை எரித்து போராட்டம்!





மட்டக்களப்பு மாவட்டத்தில் இடைநிறுத்தப்பட்டுள்ள கனிமப்பொருள் அகழ்வு அனுமதிப்பத்திரங்களை வழங்கக்கோரி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டமும் கண்டன பேரணியும் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு கல்லடியில் உள்ள புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்திற்கு முன்பாக மட்டக்களப்பு மாவட்ட கனிமம் அகழ்வு அனுமதிப்பத்திர உரிமையாளர் சங்கத்தினால் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் தாங்கள் மண் அகழ்வுக்காக பயன்படுத்தும் கன்டேனர் வாகனங்களை வரிசையில் நிறுத்திவைத்து இதன்போது ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. கனிப்பொருள் அகழ்விற்குள் இலஞ்சம் வேண்டாம், சுற்றாடல் அமைச்சரே எங்களை வாழ்விடுங்கள், எமது மாவட்டத்தில் கனிப்பொருள் அகழ்வு அனுமதிப் பத்திரங்கள் அனைத்தையும் உடன் வழங்கு போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது சுற்றாடல் அமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட்டின் உருவபொம்மையும் எரிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து வாகனங்களுடன், ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மட்டக்களப்பு நகர் நோக்கி ஊர்வலமாக சென்று, மாவட்ட செயலகத்திற்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரிடம் கையளித்தனர்.

கனிமம் அகழ்வு தொடர்பான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளவர்களின் அனுமதிப்பத்திரங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் வேறு எந்த மாவட்டங்களிலும் இல்லாத வகையிலான நடைமுறைகளைக் கொண்டுவந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் மண் அகழ்விற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை சுற்றாடல் அமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட் முன்னெடுத்து வருவதாகவும் இதன்போது குற்றம் சுமத்தப்பட்டது.

ஊழல் குற்றச்சாட்டுகளைக்கொண்ட புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிரதிப்பணிப்பாளராக கடையாற்றியவரை கிழக்கு மாகாணத்திற்கான இணைப்பாளராக நியமித்து அவர் மூலம் இந்த கனிமப்பொருள் அகழ்வு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை சுற்றாடல் அமைச்சர் முன்னெடுத்துள்ளதாகவும் இது முற்றுமுழுதான பிழையான செயற்பாடுகள் எனவும் இதன்போது குற்றம் சுமத்தப்பட்டது.

கிழக்கு செய்திகள் ■ மட்டக்களப்பு

# கிளிநொச்சி வீதி விபத்தில் பரிதாபமாக உயிரிழந்த யாழ் இளைஞன்..!



கிளிநொச்சி ஆனையிறவில் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயம் அடைந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ். வடமராட்சி சாரையடி பகுதியைச் சேர்ந்த 27 வயதான சத்தியமூர்த்தி சத்தியன் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்தில் படுகாயம் அடைந்த இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வான் ஒன்றும் உந்துருளி ஒன்றும் நேருக்கு நேர் மேதியதில் இவ்விபத்து நேர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள் ■ கிளிநொச்சி

# விடுதலைப் புலிகளை அழித்ததை குற்றமாக கருதும் அமெரிக்கா..! வீரசேகர ஆவேசம்



தலிபான் அமைப்பை கூட முடிவுக்கு கொண்டு வர முடியாமல் தள்ளாடும் அமெரிக்கா, உலகில் கொடூரமான பயங்கரவாத அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கை இல்லாதொழித்ததை குற்றமாக கருதுவதாக முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகில் கொடூரமான பயங்கரவாத அமைப்பான விடுதலைப் புலிகளை இலங்கை இல்லாதொழித்ததை அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் குற்றமாக கருதுகின்றன. தலிபான் அமைப்பை கூட முடிவிற்கு கொண்டு வர முடியாமல் அமெரிக்கா தள்ளாடுகிறது. ஆனால் நாங்கள் உலகில் பயங்கரவாத அமைப்பாக கருதப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பை முடிவிற்கு கொண்டு வந்தோம். நாட்டுக்காகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது என சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்கு செய்திகள் ■ கொழும்பு

# அனைத்து ஊடகவியலாளர்களும் கைது செய்யப்படுவார்கள் எச்சரிக்கும் தமிழ்ச்செல்வன்...!

மக்களுடைய உரிமைகள் மற்றும் நலன்கள் சார்ந்து ஊடகவியலாளர்கள் செய்திகளை வெளியிடும் போது அது பயங்கரவாதத்தை ஊக்குவிக்கின்றதாக குறிப்பிட்டு கைது செய்து 3 மாதங்களுக்கு தடுத்து வைக்கக்கூடிய அதிகாரம் பிரதி பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி ஊடக அமையத்தின் செயலாளர் மு.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

எனவே, பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை அனைத்து ஊடகவியலாளர் களும் இணைந்து தோற்கடிப்பதற்கான முனைப்புகளில் ஈடுபடவேண்டும் என்றும் மு.தமிழ்ச்செல்வன் அழைப்பு விடுத்துள்ளார். கிளிநொச்சி ஊடக அமையத்தின் ஏற் பாட்டில், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக ஊடகவியலாளர்கள், சிவில் அமைப்புக்கள் இணைந்து கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக போராட்டம் ஒன்று இன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு செய்திகள் ■ கிளிநொச்சி

# வெடுக்குநாறிமலை விவகாரம் நீதிமன்றத்தில் எழுத்தப்பட்ட மை காய்வதற்கு முன் பொலிசார் அடாவடி! - சி.சிவமோகன்



இலங்கையிலுள்ள அனைத்து சைவ மக்களும் அலையலையாக திரண்டு வெடுக்குநாறி ஆதிசிவன் கோவிலின் வளர்ச்சிக்கும், இந்த ஆலயத்தின் வழிபாட்டு உரிமையை நிலைநிறுத்துவதற்கும் உடனடியாக களத்தில் இறங்கவேண்டுமென வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இனந்தெரியாத நபர்களினால் அழிக்கப்பட்ட விக்கிரங்கள் நேற்று வெடுக்குநாறி மலையில் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்த நிலையில் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இலங்கையில் பல இலட்சம் கிரோமீற்றர் அளவினால காடுகள் காணப்படுவதாகவும் ஆனால் அங்கு எல்லாம் பொலிஸ்காவல் அமைக்கப்படவில்லை என்றும் குறிப்பாக தமிழ் பிரதேசங்களிலுள்ள இடங்களை குறிவைத்து தமிழ் மக்களுக்கு எதிராகவே பொலிசார் ஈடுபடுவதாக சி.சிவமோகன் குற்றம் சுமத்தியுள்ளார்.

வெடுக்குநாறி கோவிலின் வழிபாட்டு உரிமையை தடுக்க முடியாது என நீதி மன்றம் தெரிவித்த நிலையில் பொலிசார் மற்றும் தொல்லியல் திணைக்களத்தில் செயற்காடுகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்றும் சி.சிவமோகன் மேலும் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தில் எழுத்தப்பட்ட மை காய்வதற்கு முன்னரே வெடுக்குநாறி மலைக்கு வருபவர்கள் மற்றும் செல்பவர்களின் பெயர் விபரங்கள் பதிவு செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு செய்திகள் ■ வவுனியா

## வெடுக்குநாறிமலையில் பொலிசாரின் கேவலமான செயல் கொட்டகை அமைத்து அட்டகாசம்! - ரவிகரன்

வவுனியா வெடுக்குநாறி ஆதிசிவன் கோவிலுக்கு செல்லுகின்ற மக்களின் பெயர் விபரங்கள் பொலிசாரினால் பதிவு செய்யப்படுவதாகவும் மக்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய பொலிசார் எதற்காக இவ்வாறு பெயர் விபரங்களை திரட்டுவதாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இனந்தெரியாத நபர்களினால் அழிக்கப்பட்ட விக்கிரங்கள் நேற்று வெடுக்குநாறி மலையில் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்த நிலையில் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியிருந்தார்.



நீதிமன்றம் வழங்கிய உத்தவை கூட பொருட்படுத்தாமல் பொலிசாரும் அதிகாரிகளும் இடையூறு விளைவித்திரந்தாகவும் குறிப்பாக அவர்களது பாதணிகளைகூட களற்றாது ஆலய சூழலிற்குள் நடமாடியதாக து.ரவிகரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

வெடுக்குநாறி ஆதிசிவன் கொவிலுக்கு வருகைதருகின்ற மக்களின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கில் பொலிசார் இவ்வாறு மக்களின் பெயர் விபரங்களை திரட்டுவதாக து.ரவிகரன் குறிப்பிடுகின்றார்.

அத்துடன் பொலிசார் அங்கு தங்கியிருப்பதற்காக கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டுள்தாகவும் பாதணிகளுடன் அட்டகாசம் செய்வதாக து.ரவிகரன் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகள் எல்லாமே பொலிசாரின் கேவமான நடவடிக்கைகள் என்றும் து.ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு செய்திகள் ■ வவுனியா

## சர்வதேச விசாரணையை முடக்கும் ஓஎம்பி அலுவலகம் எதிர்ப்புப் போராட்டத்தில் உறவுகள்!



முல்லைத்தீவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

ஓ எம் பி அலுவலக செயற்பாடுகளுக்கு எதிராகவே முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இன்று காலை முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யுத்தம் நிறைவடைந்த நாள் முதல் தமது உறவுகளுக்கான நீதி கோரி போராடிவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கடந்த 2017 மார்ச் எட்டாம் திகதி முதல் முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக இலங்கையில் எமக்கு எந்த நீதியும் கிடைக்காது எனவும் இலங்கை அரசின் காணாமல் போனோர் அலுவலகம் இதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட பல ஆணைக்குழுக்கள் எவையும் எமக்கு பலனற்றவைகள் எனவும் சர்வதேச நீதிப்பொறிமுறையே தமக்கு தேவை என வடக்கு கிழக்கு எங்கும் ஆறு ஆண்டுகள் கடந்து ஏழாவது ஆண்டாக 150 க்கு மேற்பட்ட தாய், தந்தையரை இழந்தும் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் இலங்கை அரசாங்கமும் காணாமல் போனோர் அலுவலகம் ஊடக இவர்களது சர்வதேச நீதி விசாரணை கோரிக்கையை முடக்கும் முகமாக பல நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் தமது உறவுகளை அச்சுறுத்தி விபரங்களை பதிய முற்படுவதாகவும் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இந்நிலையில் இன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் காணாமல் போனோர் அலுவலக விசாரணைகள் முன்னெடுக்கப்படவிருந்த நிலையிலேயே மக்கள் மாபெரும் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடத் தயாராகினர்.

அதனையடுத்து, இன்று விசாரணைகள் இடம்பெறாது என காணாமல் போனோர் அலுவலகம் அறிவித்திருந்த நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக திரண்டு காணாமல் போனோர் அலுவலக செயற்பாடுகள் தமக்கு தேவையில்லை என வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

வழமைபோன்று உறவுகளின் போராட்டம் இடம்பெற்ற போது சிவில் உடையில் வந்த காவல் துறையினர் மற்றும் இராணுவ புலனாய்வாளர்கள் காணொளி மற்றும் புகைப்படம் எடுத்து அச்சுறுத்தல் விடுத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள் ■ முல்லைத்தீவு

## தமிழீழத் தேசிய நாட்டுப்பற்றாளர் நாள் நிகழ்வுகள் பிரான்ஸ் 2023



தமிழீழத் தேசிய நாள் நிகழ்வுகள் இன்று பிரான்ஸ் ட்ரான்சியில் திரு குருபரன் தலைமையில் நடைபெற்றிருந்தது. அதன் சில காட்சிகள்.

## புதிய சட்டம் கருத்துச் சுத...

புதிய சட்டம் கருத்து சுதந்திரத்தின் கிளிநொச்சி ஊடக அமையத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

"தற்போது சிறிலங்கா அரசு முன்வைத்துள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் சட்டமாக்கப்பட்டால் ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடகத்துறைக்கு மிகப்பெரும் ஆபத்து ஏற்படும்.

ஊடகவியலாளர்கள் தங்களது கடமைகளைச் சுதந்திரமாக மேற்கொள்வது என்பது கேள்விக்குள்ளாகும்."

போன்ற விடயங்களை வலியுறுத்தி, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக ஊடகவியலாளர்கள், சிவில் அமைப்புக்கள் இணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் "புதிய சட்டம் கருத்து சுதந்திரத்தின் சாவு மணி, பொருளாதார நெருக்கடியில் சிக்குண்ட நாட்டை ஜனநாயக நெருக்கடிக்குள்ளும் தள்ளாதீர், நல்லாட்சிக்கே சட்டத்தை உருவாக்குங்கள் அடக்கி ஒடுக்க உருவாக்காதீர்கள்." போன்ற பதாதைகளை ஏந்தி இருந்தனர்.

## ரணில் விக்கிரமசிங்கவுடன்...

அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதிபரின் ஆலோசனையின் அடிப்படையில், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு தலா பத்து கிலோ அரிசி வழங்க தீர்மானிக்கப்பட்டது.

இத்திட்டம் சாதி, மத பாகுபாடின்றி செயல்படுத்தப்படுகிறது.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் உள்ள விவசாயிகளின் நெல்லுக்கு உத்தரவாத விலையை வழங்குவதற்கும் அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

நாடு கடுமையான நெருக்கடியில் இருந்த போது, நாட்டை மீட்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ரணில் விக்ரமசிங்கவுக்கு ஒட்டுமொத்த மக்களும் நன்றி கூற வேண்டும்" என்றார்.

## மக்களை மேலும் பாதாள...

நெருக்கடிக்கு நிலையான தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியாது.

மிக நீண்டகாலமாக எமது நாட்டில் தீர்க்கப்படாதுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும்.

அதன்மூலமே சர்வதேசம் மற்றும் பெருமளவான முதலீட்டாளர்களின் கவனத்தினைப் பெற முடியும். குறிப்பாக புலம்பெயர் தமிழ் முதலீட்டாளர்கள் இப்பொழுதும் தயாராகவே இருக்கின்றார்கள். ஆனால் முதலில் எமது இனப்பிரச்சினைக்கு நிலையானதொரு தீர்வை பெற்றுத் தருவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்.

அவ்வாறு கிடைக்கப் பெறும் பட்சத்தில் எமது வடக்கு கிழக்கு மாகாணங்களை நாம் பொருளாதார கேந்திர மையங்களாக அபிவிருத்தி செய்வதற்கு தயாராக இருக்கின்றோம்.

ஆனால் அரசாங்கம் இன்னமும் கடனை பெற்று கொள்வதிலேயே குறியாக இருக்கின்றது. அதிலும் சர்வதேச நாணய நிதியத்துடனதும் முன்னெடுக்கப்பட்டு இருக்க வேண்டும்.

அவ்வாறு இடம்பெற்றிருந்தால் குறித்த ஒப்பந்தம் தொடர்பான நிபந்தனைகளை மறுசீரமைத்து இருக்கலாம். மக்கள் தற்போது அனுபவிக்கின்ற வரிச்சுமைகள் உள்ளிட்ட பாதிப்புக்களைத் தவிர்த்து இருக்கலாம்.

அதனை விடுத்து தற்போது ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு முதல் தவணைக் கடனை பெற்றுக் கொண்டதன் பின்னர் குறித்த ஒப்பந்தம் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படமை பயனற்றது.

அது தொடர்பாக விவாதங்களை நடத்துவதும் வீண்விரயமான செயலாகவே நாம் காண்கின்றோம். அதுவும் மக்கள் பணத்தினை வீணடித்து இவ்வாறு செயற்படுவது தவறான செயலாகும்.

இந்த விவாதத்திற்காக மூன்று நாள் எடுத்துக் கொள்வது பணத்தை வீணடிக்கும் செயலாகும். மேலும் இவ்விடயம் தொடர்பாக சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ள கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

அதிலும் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் விரைவாக முன்னெடுத்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் பொருளாதார நெருக்கடியினை எதிர்கொண்ட பல நாடுகள் 46 நாட்கள் முதல் 100 நாட்களுக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டுள்ளன. எனினும் நாம் கிட்டத்தட்ட ஏழு மாத காலம் தாமதித்தே சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதியைப் பெற்றுக் கொண்டோம்.

அனைத்துச் சந்தர்ப்பத்திலும் நாம் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தை, மற்றும் கடந்த செப்டெம்பர் மாதம் கைச்சாத்திடப்பட்ட ஊழியர் மட்ட இணக்கப்பாடு குறித்த அறிக்கை ஆகியவற்றை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறு அரசாங்கத்திடம் பல முறை வலியுறுத்தி இருந்தோம். எனினும் அரசாங்கம் அதனைப் பொருட்படுத்தவில்லை.

மக்களை மேலும் பாதாளத்திற்குள் தள்ளிவிட்டு பெருமை கொள்கின்றது இந்த அரசாங்கம். புதிய சட்டங்களைக் கொண்டு வரும் அரசாங்கம் எதனையும் நடைமுறைப்படுத்துவதாகத் தெரியவில்லை. நடைமுறைப்படுத்தவும் இல்லை. உதாரணமாக வரிக் கொள்கைகளில் திருத்தம் தொடர்பாக நாணய நிதியம் வழங்கிய ஆலொசனைகளை அரசாங்கம் விரைவாகவும் அவசரமாகவும் அமுல்படுத்தியிருந்தது.

ஆனால் அரசாங்கத்தின் நிர்வாகக் கட்டமைப்புக்களில் மறுசீரமைப்பு ஏற்படுத்துவது தொடர்பாக அனைத்தையும் அரசாங்கம் மறந்துவிட்டது. அத்துடன் ஊழல் ஒழிப்புத் தொடர்பில் நடைமுறைக்கு பொருத்தமான மற்றும் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பையும் கடனையும் மட்டும் வைத்துக் கொண்டு நாட்டினது பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வினைப் பெற்றுக் கொள்ளவே முடியாது.

தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு முதலில் தீர்வினைப் பெற்றுத் தாருங்கள் நாம் வடக்கு, கிழக்கு மாகாணங்களை நாட்டினது பொருளாதார கேந்திர நிலையங்களாக மாற்றிக் காட்டுகின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதற்குத் தயாராகவே இருக்கின்றது. மேலும் இந்த விடயத்தில் புலம்பெயர் தமிழ் தரப்புக்கள் என்றும் தயாராகவே இருக்கின்றன. ஆனால் அதற்கு முன்னர் மிக நீண்டகாலமாகவே தொடரும் எமது இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்க்கமான முடிவு காணப்பட வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

## அரசுக்கு எதிராக ஹர்த்தா...

எதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பு பேச்சுவார்த்தைக்கு சென்றது என்றும் இது ரணிலுக்கு தமிழ் மக்கள் மத்தியில் ஒரு அங்கீகாரத்தை ஏற்படுத்துவதற்காக செய்யப்பட்ட ஏமாற்று வேலை என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் அரசாங்கத்திற்கு எதிராக ஹர்த்தால் அனுஸ்டித்த தமிழ் தரப்புக்கள் அனைத்து நாடாளுமன்ற வாக்கெடுப்பில் ஓடி ஒளிந்து அரசுக்கு ஆதரவு வழங்கியிருந்தாகவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிடுகின்றார்.

இந்த ஹர்த்தால் நடவடிக்கையால் 100 கோடி ரூபா, ஒருநாளில் மட்டும் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்பு என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழில் மே தினத்தன்று...

மே முதலாம் திகதி காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலிருந்து மோட்டார் வாகன ஊர்வலம் ஆரம்பித்து யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் நிறைவுபெறவுள்ளது.

இந்நிலையில் உலகம் முழுவதும் மே தினம் உழைப்பாளர்கள் உரிமைக்காக கொண்டாடப்படுகின்ற நிலையில் அன்றைய தினம் அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடி ஊர்வலத்துக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## வலிந்து காணாமல் ஆக்கப்...

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் செயலக பணிக்குழு தலைவர் சாகல ரத்நாயக்க நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வருகை தந்து நிகழ்வுகளில் கலந்து கொண்ட போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு உள்ளக பொறிமுறை மூலம் நீதி வழங்க புதிதாக ஆணைக்குழு அமைப்பதாக கூறியுள்ளார்

யுத்தம் முடிந்து பதின்நான்கு ஆண்டுகள் கடந்துள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்க உருவாக்கப்பட்ட பல ஆணைக்குழுக்கள் மற்றும் உள்ளக நீதிப் பொறிமுறைகள் யாவும் காலத்தை கடத்துவனவாகவும் ஆட்சியாளர்கள் அவற்றை துஸ்பிரயோகம் செய்வதுமாகவே அமைந்தது. இதனால் ஏமாற்றம் அடைந்த பாதிக்கப்பட்ட மக்கள் உள்ளகப் பொறிமுறைகளில் நம்பிக்கையை இழந்து சர்வதேச பொறிமுறை மூலம் தமக்கான நீதி வழங்கப்பட வேண்டும் என ஒருமித்த கோரிக்கையை தொடர்ந்து முன்வைத்து வருகின்றனர்.

இலங்கை ஆட்சியாளர்களினால் கடந்த காலத்தில் கொண்டுவரப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் பர்ணகம ஆணைக்குழு அத்துடன் உடலகம ஆணைக்குழு போன்றன காலத்தையும் நீதியையும் நீர்த்துப் போகச் செய்யும் வகையில் கிடப்பில் போடப்பட்டன.

அத்துடன் ஐ நா மனிதவுரிமைப் பேரவையால் வழங்கப்பட்ட உள்ளகப் பொறிமுறை திட்டமிட்டு காலம் கடத்தப்பட்டது.

இலங்கை அரசு உள்ளகப் பொறிமுறை நீதிக்கான சந்தர்ப்பங்களை திட்டமிட்டு அலட்சியப் படுத்திவிட்டு மீண்டும் ஒரு நாடகத்தை அரங்கேற்ற தயாராகின்றனர்.

எனவே உள்ளக நீதிப் பொறிமுறை தோல்வியடைந்து விட்டது பாதிக்கப்பட்ட மக்களும் அதனை நிராகரித்து விட்டனர் ஆகவே நியாயமான நீதி கிடைக்க வேண்டுமாக இருந்தால் சர்வதேச நீதிப் பொறிமுறையே அவசியமானதாகும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விளம்பர
தொடர்புகளுக்கு
021 221 7557
Mobile : +94 76 567 3339

